செ.வெ.எண்: 342 நாள்:21.04.2010

# செய்திக் குறிப்பு

## உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், தரமணி, சென்னை.

## தேசிய விருதுகள் 2008–2009

விருந்தோம்பல் கல்வித்துறைக்கான இந்திய அரசின் சுற்றுலா அமைச்சக விருதுகள்

சென்னையில் உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் 1963ம் ஆண்டு இந்திய அரசின் சுற்றுலாத்துறையின் கீழ், மாநில அரசுடன் இணைந்து தொடங்கப்பட்டது. இத்துறையில் தொடங்கப்பட்ட முன்னோடி பயிற்சி நிறுவனம் இதுவே. இப்பயிற்சி நிறுவனத்தில் விருந்தோம்பல் கல்வித்துறையில் பட்டம், பட்டயம் முதுநிலை பட்டயம், தொழில்நுட்பச் சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. இவ்வகுப்புகள் மூலம் விருந்தோம்பல் துறையில் நிர்வாகிகள், மேலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் பெருமளவில் உருவாக்கப்படுகிறார்கள்.

தேசிய உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்ப ஆணையத்தின் கீழ் செயல்படும் அனைத்து உணவக மேலாண்மை பயிற்சி நிறுவங்களுக்கும், விருந்தோம்பல் கல்வித்துறையில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் சிறப்பாக செயலாற்றியதற்கான தேசிய அளவிலான பல்வேறு விருதுகளை ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் வழங்கி வருகிறது.

இந்த வரிசையில் 2008–09ஆம் ஆண்டிற்கான பின்வரும் ஐந்து விருதுகளை, சென்னை தரமணியில் உள்ள உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் பெற்றுள்ளது.

- மிகச்சிறந்த உணவக மேலாண்மை பயிற்சி நிறுவனம் (அனைத்து வகைகளிலும்)
- மிகச்சிறந்த கல்வி வளர்ச்சி விகிதம்
- மத்திய அரசு திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்தியது
- சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்கான சிறப்பு விருது
- 'ஹுனார் சே ரோஜ்கார்' (ஒட்டல் பணியாளர்களுக்கான பயிற்சி) திட்டத்திற்கான சிறப்பு விருது.

இது இந்தியஅளவில் தேசிய உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில் நுட்ப ஆணையத்தின் கீழ் இயங்கும் ஒரு பயிற்சி நிறுவனம் பெற்ற அதிகபட்ச விருதுகளாகும்.

மேலும், உணவு தயாரிப்புக் கலையில், சென்னை உணவக மேலாண்மை உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மாணவர் திரு. எஸ். விக்னேஷ், நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளார்.

புதுடெல்லி, புசா பகுதியில் உள்ள உணவக மேலாண்மை நிறுவனத்தில் 15–04–2010 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய சுற்றுலா இணையமைச்சர் திரு. சுல்தான் அகமது அவர்கள் இவ்விருதுகளை வழங்கினார். இவ்விழாவில் மத்திய சுற்றுலாத் துறை செயலாளர் திரு. சுஜித் பானர்ஜி, மத்திய சுற்றுலா தலைமை இயக்குநர் திரு தேவேஷ் சதுர்வேதி, இ.ஆ.ப., மற்றும் உணவக மேலாண்மை உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், விருந்தோம்பல் துறை வல்லுநர்களும் கலந்துகொண்டார்கள்.

சென்னை, உணவக மேலாண்மை உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் சார்பில் இதன் முதல்வர் திரு. எஸ்.ராஜ்மோகன், அவர்கள் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார். அவருடன் திரு.எம்.திரிலோகசந்தர், துறைத்தலைவர்(பொறுப்பு), திரு. ஆர். ராமமூர்த்தி, நிர்வாக அலுவலர் ஆகியோரும் விழாவில் பங்கேற்றனர்.

வெ. இறையன்பு,
தலைவர்,
உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்,
அரசுச் செயலாளர்,
சுற்றுலா–பண்பாட்டுத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,**

**தலைமைச் செயலகம்,**

**சென்னை–9.**